# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, இலங்கை பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1998, யூன் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1998, யூன் மாதம் 26 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 6.50** **தபாற் செலவு : ரூபா 2.50**

## 1998 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, இலங்கை பிரம்ம குமாரிகள் ராஜயோக நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 60/96

### இலங்கை பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"இலங்கை பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலையம்" என அறியப்படுவதும் அழைக்கப்படுவதுமான நிலையமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக் கிணங்கச் சொல்லப்பட்ட நிலையத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறை வேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இதன்முன்னர் இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ளதாதலாலும்.

அத்துடன், சொல்லப்பட்ட நிலையம் எப்பல்வேறு குறிக் கோள்களுக்கும் கருமங்களுக்குமாக உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை அது வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப் பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் ;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, இலங்கை பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலையம் (கூட்டி ணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இலங்கை பிரம்ம குமாரிகள் ராஜயோக நிலையத்தைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் "நிலையம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலையத்தின் இப் போதுள்ள உறுப்பினர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இனிமேல் சேர்த்துக்கொள் ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தகைய ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலையம்" என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழி யுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங் களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; அத்துடன் ஒரு பொது இலச்சினையை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும்.

2 — டீ 039880 — 1,100 (96/05)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:—

(அ) ஆன்மீக அறிவைப் பரப்புதலும், ராஜயோக தியான முறையை அனுசரித்தலை அறிமுகப்படுத்துதலும் ;

(ஆ) ராஜயோக தியானத்தை அனுசரித்தலை ஊக்குவிப்பதன்மூலம் அக அமைதியை நாடும் அனைத்து ஆட்களுக்கும் உதவி வழங்குதல் ;

(இ) அனைவர்பாலும் அன்பையும் மதிப்பையும் அடிப்படையாகக் கொண்ட சமுதாயமொன்றை உருவாக்குதல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் மேற்கூறப்பட்ட குறிக்கோள்களை மேம்படுத்தும் அத்தகைய வேலைகள் யாவற்றையும் பொறுப்பேற்றலும் நிறைவேற்றுதலும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய செயல்கள், கருமங்கள், காரியங்கள் ஆகியன யாவற்றையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவம் உடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள் வங்கிக்கணக்குகளைத் திறக்கவும், தொழிற்படுத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாது பணங்களைக் கடனாகப் பெறவும் அல்லது திரட்டவும், மானியக்கொடைகளையும், நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் ஈடுபடுத்தவும் வேலைக்கமர்த்தவும், வேலைநீக்கஞ் செய்யவும் உள்ள தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய, அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கிணங்கத் தெரிவுசெய்யப்படக்கூடியவர்களான பதவிதாங்குநர்களையும் அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டமைந்த முகாமைச்சபையினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச்சபை இச்சட்டம் தொடங்கும் நாளுக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் நிலையத்தின் முகாமைச்சபையாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) உறுப்பினர்களின் பொதுக்கூட்டம் எதிலும் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டு, உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் என்பவற்றுக்காகவும், முகாமைச்சபையினதும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் ஆகியோரினதும் கடமைகள் புரியப்படுவதற்காகவும், முகாமைச் சபையைத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காகவும் முகாமைச்சபையின் அலுவல்களைக் கையாளுவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைக்காகவும், பொதுவில் வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபன விதியெதுவும் அல்லது இதன்பின்னர் நிறைவேற்றப்படக்கூடிய கூட்டுத்தாபன விதியெதுவும் கூட்டுத்தாபனத்தின் பொதுக்கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டன்றி, மாற்றப்படுதல், திருத்தப்படுதல், ஒழிக்கப்படுதல் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படுதல் ஆகாது.

(3) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலுள்ளவையான சபையின் விதிகள், அவை இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராதவரையில், இப்பிரிவின் கீழாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் யாவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*நிலையம் செலுத்த வேண்டியுள்ளனவும் நிலையத்துக்குச் செலுத்தப்படவுள்ளனவையுமான தனிசுகள்.*

**7.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நிலையத்துக்குள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தினத்தன்று நிலையத்துக்குச் செல்மதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் நிலையத்துக்குச் செலுத்தப்படவுள்ள ஒப்பப் பணங்கள், உதவுதொகைகள் என்பன யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**8.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்குரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதையேனும் கையேற்கவும், வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலுடையதாதலும் இயலுமானதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கு அமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத்தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்விதம் பொறிக்கப்பட வேண்டுமென்பது.*

**9.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது முகாமைச் சபையின் மூன்று உறுப்பினரது (அவர்களுள் ஒருவர் தவிசாளராக இருக்க வேண்டும்) முன்னிலையிலல்லாமல் எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் சமுகமாயிருந்ததற்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதி ஒப்பமிடல் வேண்டும். அவ்விதம் ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சிக்காரராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதிகளைப் பயன்படுத்தல்.*

**10.** கூட்டுத்தாபனத்தின் பணமும், ஆதனமும் எவ்வாறு பெறப்படினுஞ்சரி இதன்கண் தரப்பட்டவாறான குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அதன்பாகம் எதுவும், பங்கிலாபம், பணக்கொடை என்ற வகையில் அல்லது வேறுவகையில் எவ்வாறாயினும் இலாபம் என்ற வகையில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு நேரடியாகவேனுஞ்சரி, மறைமுகமாயினுஞ்சரி செலுத்தப்படுதலோ மாற்றப்படுதலோ ஆகாது.

*11.* இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும், அரசியல் குழுவினது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளை யேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்களின்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

*12.* இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.